PDNL
PALAYAMKOTTAI DIOCESE
# NEWS LETTER

Vol.53 JUNE 2026 No. 09



*Solemnity of*

*The most Sacred Heart of Jesus*

# ADMINISTRATOR SPEAKS

Dear Fathers, Sisters, Brothers, and Lay Faithful,

Warm greetings to you in the blessed name of our Lord Jesus Christ.

On Friday, 12 June 2026, the Church joyfully celebrates the Feast of the Sacred Heart of Jesus, inviting us once again to contemplate the inexhaustible love of Christ poured out for humanity. The Sacred Heart stands as a profound symbol of divine mercy, compassion, sacrifice, and faithful love — a love that continues to sustain the life and mission of the Church in every age.

For us who are called to priestly and religious life, this feast holds a particular significance. The Heart of Jesus is both the source and model of our vocation. In gazing upon His Sacred Heart, burning with love for God's people, we are reminded that our ministry and consecration are not simply functions or responsibilities, but a participation in the compassionate mission of Christ Himself.

The Gospel reveals to us a Savior who was deeply moved by the suffering of humanity — One who welcomed the sinner, healed the broken-hearted, strengthened the weak, and offered hope to the weary. The Heart of Jesus remained ever open to those in need. As priests and religious, we are called to reflect this same pastoral charity in our words, actions, and daily witness.

In today's rapidly changing world, the Church continues to face many challenges. People search for meaning amidst uncertainty, families struggle under many burdens, and countless hearts long for healing and peace. In such times,

the faithful look to the Church not merely for answers, but for authentic witnesses of Christ's love. They seek shepherds and consecrated persons whose hearts radiate kindness, patience, mercy, and hope.

The Feast of the Sacred Heart reminds us that fruitful ministry flows first from intimacy with Christ. Before we are preachers, teachers, administrators, or ministers, we are disciples called to remain close to the Heart of the Master. Only in prayer, Eucharistic communion, and faithful surrender to God's will can our vocation remain joyful and fruitful.

At times, the demands of ministry may bring fatigue, discouragement, or loneliness. Yet the Sacred Heart of Jesus remains our refuge and strength. In Him we find renewal for our spirit, healing for our wounds, and courage to continue serving God's people with generosity and humility. His Heart assures us that no labor offered in love is ever wasted.

The Eucharist, which flows from the pierced side of Christ, remains the center of our spiritual life. Every celebration of the Holy Mass draws us deeper into the mystery of Christ's sacrificial love. At the altar, priests are invited to unite their hearts completely with the Heart of Christ the Eternal Priest. Religious men and women, through the witness of consecrated life, become living signs of that same self-giving love in the midst of the world.

The saints devoted to the Sacred Heart continually remind us that holiness is rooted not in extraordinary achievements, but in faithful love. Through simplicity, humility, prayer, and service, they allowed the Heart of Jesus to transform their own hearts.

As we celebrate this solemn feast in our diocesan family, let us renew our commitment to live our vocation with deeper zeal, fidelity, and compassion. May our parishes, convents, seminaries, and institutions become true reflections of the Heart of Christ — places where every person encounters mercy, welcome, and hope.

Let us also remember in our prayers all priests, religious, seminarians, and those discerning their vocation. May the Sacred Heart continue to inspire many generous hearts to respond courageously to the call of the Gospel.

Entrusting our Diocese and all our faithful to the loving protection of the Sacred Heart of Jesus, let us pray together:

> Sacred Heart of Jesus,
> source of mercy, compassion, and faithful love,
> make our hearts like unto Yours.

With prayerful wishes on the
Feast of the Sacred Heart of Jesus.

Yours devotedly in our Lord.

**Rev. Fr. Motcharajan Michael**
Administrator
Diocese of Palayamkottai.

| This Month Collection |
|---|
| Peter's Pence Collection – 29.06.2026<br>To the Holy Father in his service to the Universal Church<br>Sunday after the Solemnity of SS. Peter and Paul. |

**Rev.Fr. Deepak Michael Raja C., Procurator**

## ADMINISTRATOR'S ENGAGEMENTS

**June - 2026**

| Date | Time | Programme |
|---|---|---|
| 14-06-2026 | 06:00 pm | Church Blessing, Punganoor Puliyampatti, Parish |
| 19-06-2026 | 06:00 pm | Feast Mass, Xavier Colony |
| 21-06-2026 | 06:00 pm | "Servant of God" Peter Paradesi Memorial Mass, Palay Market |

## FROM DIOCESAN ADMINISTRATOR'S DESK

**Announcements**

Dear Brother Priests,

**Recollection**

Recollection for the month of June will be held on 11$^{th}$, Thursday at Bishop's House, Palayamkottai.

10.00 am – Eucharistic Adoration & Confession

11.00 am – Tea

11.30 – 12.30 – திருஅவை நீதிமன்றம்: கேள்வி, பதில்கள்
When is a marriage invalid?
The role of the diocesan tribunal.

12.30 pm – Announcements followed by lunch

**Fr. Motcharajan M.**
**Diocesan Administrator**

## HEARTFELT CONDOLENCES AND PRAYERS



Mrs. Maria Visuvasam N. (75) beloved Mother of Rev. Fr. Viagapparaj N. passed away on 23rd May 2026. We express our sincere and heartfelt condolences to Rev. Fr. Viagapparaj N. and his family. May her soul Rest in Peace.

## ANNIVERSARIES

### BIRTHDAYS




| | |
|---|---|
| 01/06/ | Fr. Joseph Rajan S. |
| 01/06/ | Fr. Vincent I. |
| 02/06/ | Fr. Xavier Terrence T. |
| 03/06/ | Fr. Jeni Vimal Naveen J. MSFS |
| 09/06/ | Fr. Jegan P. |
| 09/06/ | Fr. Jeya Kumar ISCH |
| 10/06/ | Fr. Michael Raj M. |
| 17/06/ | Fr. Anand Kumar K. MOC |
| 19/06/ | Fr. Sagaya John J. |
| 23/06/ | Fr. Arul Maria Nathan J. |
| 23/06/ | Fr. Prakesh Xavier OCD |
| 29/06/ | Fr. Gerry Thisai |
| 29/06/ | Fr. Simon Selvan I. |

Dear Fathers, on your special day, it is our privilege to appreciate your valuable ministry for the people of God. May God shower His grace upon you on this birthday! **“MANY MORE HAPPY RETURNS OF THE DAY”**

## ORDINATION DAYS



| | |
|---|---|
| 05/06/1994 | Fr. Alphonse Arulanandam |
| 21/06/2009 | Fr. Anto P. |
| | Fr. Arul Antony S. |
| | Fr. Jegan P. |
| 30/06/2001 | Fr. Eric Joe |
| 30/06/2020 | Fr. Jeni Vimal Naveen J. MSFS |

Dear Fathers, We praise God for your Priesthood and your service to His people. May the Power of His Spirit guide you in your ministry and all through your life!

## FEAST DAYS

**01 / 06 / Feast of St. Justin the Martyr**

Fr. Rex Justin S.

**13 / 06 / Feast of St. Antony of Padua**

Fr. Anto P

Fr. Antony A. Cruz

Fr. Antony Raj S.

Fr. Antony Raj M.

Fr. Antony Raj V.S.

Fr. Antonyraj J

Fr. Antonysamy M.S.

Fr. Antonysamy S.A.

Fr. Antony Xavier A.

Fr. Arul Antony S.

Fr. Antony Gnana Dhinakaran

**19 / 06 / Solemnity of the Most Sacred Heart of Jesus**

Brothers of the Sacred Heart of Jesus

Sisters of the Sacred Heart of Jesus

**21 / 06 / Feast of St. Aloysius Gonzaga**

Fr. Gnanapragasam F.

Fr. Aloysius Durairaj L.

Sisters of St. Louis Gonzaga

**29 / 06 / Solemnity of SS. Peter and Paul**

Fr. Peter A. Fr. Simon Selvan I.

Fr. Peter Pitchaikan A.

Dear Fathers, Brothers and Sisters, may your patron saints bring God's love and Grace into your lives. May your ministry and service for His glory be the source of joy to your people! **"HAPPY FEAST"**

## NECROLOGY

We remember our beloved **Fr. Arulappan S.L.,** in our prayers on June 15, his death anniversary. May His Soul Rest in Peace!



## ECCLESIASTICAL TRIBUNAL (May 2026)

**The following matrimonial cases have been admitted to the process of nullity:**

1. Johnson X (Kayathar) **Vs** Mahalakshmi A (Kovilpatti)
2. Maria Hilda P (Vadiyur) **Vs** Arul Benjamin T (Vadiyur)
3. Selva Mary M (Irudhaya Nagar) **Vs** Isakkimuthu @ Esekielraj P (Sankar Nagar)
4. Pavila A (Alavanthankulam) **Vs** Prasanth A (Alavanthankulam)
5. Maria Subatha I (Rengasamuthram) **Vs** Raman @ Peter S (Rengasamuthram)

**The following marriages have been declared null and void:**

1. Antony Jackson (Cheranmahadevi) **Vs** Christina (Malad East)
2. Divya K (Shanthi Nagar) **Vs** Joseph Akilan J (KTC Nagar)
3. Raja Sekar (Velayuthapuram) **Vs** Ramya (Chengalpat)
4. Starwin Lydia K (Irudhayakulam) **Vs** Jerome (Keeranur)
5. Nelson Thanislaus S (Shanthi Nagar) **Vs** Divya A (Surandai)
6. Lourdhu Antony Baskar A (Singamparai) **Vs** Benista M (Singamparai)
7. Franklin Joseph F (Jawahar Nagar) **Vs** Jency V (Jawahar Nagar)

**Fr. Victor Raj**
Judicial Vicar

## இறையடியார் பீட்டர் பரதேசி
## 68ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி

| | | |
|---|---|---|
| நாள் | : | 21-06-2026 ஞாயிறு |
| மாலை | : | 05.30 கல்லறை மந்திரிப்பு<br>06.30 திருப்பலி |
| தலைமை | : | மேனாள் ஆயர் A. ஜூடுபால்ராஜ் D.D. |
| மறையுரை | : | அருட்பணி சைமன்ராஜ், கப்புச்சின், அருளகம் |
| இடம் | : | புனித அந்தோனியார் மறைமாவட்டத் திருத்தலம், மார்க்கெட், பாளை |

## DIOCESE, RELIGIOUS PRIESTS
## TRANSFERS & APPOINTMENTS – 2026
## DIOCESE OF PALAYAMKOTTAI

| | |
|---|---|
| Xavier Home | Fr. Kulandai Raj |
| Medical Leave | Fr. Antony Xavier |
| **Parish Priests** | |
| Duraisamiapuram | Rev. Fr. Nesamani OCD |
| Nalatinputhur | Rev. Fr. M. John De Britto MSFS. |
| **Assistant Parish Priests** | |
| Kamanayakanpatti | Rev. Fr. Maria Joemics |
| **Assistant Parish Priests** | |
| Shenkottai | Rev. Fr. Joseph Patibanda SVD |
| Tenkasi | Rev. Fr. P. Mahimainathan HGN |
| Kuruvikulam | Rev. Fr. Sesu Kumar C, O. Praem |
| Agarakattu | Rev. Fr. A. Pushpa Raj HGN |
| Singamparai | Rev. Fr. Leo Fernandes MIC |

# பாளையங்கோட்டை மறைமாவட்ட குருமாணவர்களின் கோடை முகாம்

## வடக்கு வண்டானம் பங்கு - 2026

### 04.05.2026 திங்கள்

ஏறக்குறைய மாலை 5 மணியளவில் குருமாணவர்கள் வருகை தந்தனர். இதில் திருத்தொண்டர்கள் 2 பேர், இறையியல் பயில்வோர் 14 பேர், களப்பணியாளர்கள் 6 பேர், மெய்யியல் பயில்வோர் 3 பேர் கலந்து கொண்டனர். மாலை 5.30 மணியளவில் தேநீர் வழங்கப்பட்டது. 6 மணிக்கு முகாமிற்கான பொறுப்புகள் பகிரப்பட்டன. 7 மணியளவில் பங்கு ஆலயத்தில், பங்குத்தந்தை. சதீஷ் செல்வ தயாளன் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலி முடிந்தபின் பங்குத்தந்தை அவர்கள், பங்கின் வரலாறு, அமைப்பு, செயல்பாடுகள் குறித்து சகோதரர்களுடன் சுருக்கமாக பகிர்ந்துகொண்டார். பின்னர் 8.30 மணியளவில் இரவு உணவு வழங்கப்பட்டது. தொடர்ந்து 9 மணியளவில் கலைநிகழ்ச்சிகளுக்கான பயிற்சி நடைபெற்றது.

### 05.05.2026 செவ்வாய்

காலை 6.30 மணிக்கு, பங்கு ஆலயத்தில் காலை ஜெபம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 6.50 முதல் 7.45 வரை சாலையின் இருமருங்கிலும் செடி நடுவதற்கான வேலை நடைபெற்றது. காலை உணவு 8.30 மணிக்கு வழங்கப்பட்டது. பின்னர் 9.30 மணியளவில், புனித சவேரியார் நடுநிலைப்பள்ளியின் வகுப்பறையில் வைத்து, முதல் அமர்வு தூய ஆவியார் பாடலுடன் தொடங்கியது. அமர்வை வழிநடத்தவிருந்த ஆசிரியர்கள் மூவரையும் அருட்பணி. தயாளன் அவர்கள் அறிமுகம் செய்து, வரவேற்றார்.

முதலில், அச்சங்குளம் ஆர்.சி. தொடக்கப்பள்ளியின் கைத்தொழில் ஆசிரியர் திரு. சூசைமரியான் அவர்கள் வண்டானம் பங்கின் அமைப்பு, மக்களின் எதிர்பார்ப்பு குறித்துப் பேசினார். அவரைத் தொடர்ந்து, புனித சவேரியார் நடுநிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியை திருமதி. ஸ்டெல்லா அவர்களும் அச்சங்குளம் ஆர்.சி. தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. ஜான்பால் அவர்களும் பள்ளி நிர்வாகம் மற்றும் தாளாளரின் ஈடுபாடு ஆகியவைகளைக் குறித்துப் பேசினர். இறுதியில் அருட்பணி. தயாளன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க, சகோதரர்கள் பொன்னாடைப் போர்த்தினர். தொடர்ந்து காலை 10.45 மணிக்கு குளிர்பானம் வழங்கப்பட்டது. பின்னர் 11.15 மணியளவில் இரண்டாம் அமர்வு தொடங்கியது.

புனேயிலுள்ள பாப்பிறை குருமடத்தின் மெய்யியல் துறையின் முதல்வர், அருள்முனைவர். நிஷாந்த் அவர்கள் இரண்டாம் அமர்வை வழிநடத்தினார். தந்தை அவர்களை சகோ. மோட்சம் வரவேற்றார். இன்று குருமாணவர்களைச் சந்திக்கும் ஏழு வகையான சவால்களைக் குறித்தும் அவற்றின் ஒரே தீர்வு சுய அறிவில் வளர்வதே எனவும் தந்தை உரையாற்றினார். சகோ. சூர்யா தந்தைக்கு நன்றி தெரிவித்து பொன்னாடைப் போர்த்தினார். தொடர்ந்து 12.45 மணியளவில்

நாடகப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. மதியம் 1.15 மணிக்கு உணவு வழங்கப்பட்டது. பின்னர் 2 மணிமுதல் பயிற்சி தொடர்ந்தது.

மாலை 4.15 மணிக்கு பயிற்சி நிறைவுற்று, குளியலுக்குப்பின் 5.30 மணிக்கு தேநீர் வழங்கப்பட்டது. அதன்பின் சகோதரர்கள் குழுக்களாகப் பிரிந்து, வண்டானம் பங்கிலுள்ள குடும்பங்களைச் சந்தித்தனர். பின்னர் மாலை 7 மணியளவில், அருட்பணி. V. K. S. அருள்ராஜ் அவர்கள் பங்காலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார். கலை மாலைக் கொண்டாட்டமானது 7.45 மணிக்கு ஆரம்பமானது. 9.30 மணியளவில் நிகழ்ச்சிகள் நிறைவுற்று, இரவு உணவு வழங்கப்பட்டது. அதன்பின் 10.15 மணியளவில் அன்றைய நாளுக்கான திறனாய்வு அருட்பணி. V. K. S. அருள்ராஜ் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வுகளில் நேரத்தோடு வந்து கலந்து கொள்ளவும் பயிற்சியில் ஆர்வத்தோடு ஈடுபடவும் அறிவுறுத்தப்பட்டது. அதன்பின் 11.30 மணிவரை பயிற்சி நடைபெற்றது.

06.05.2026 புதன்

காலை 6.30 மணிக்கு, பங்கு ஆலயத்தில் காலை ஜெபம் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து 6.45 முதல் 7.45 வரை சாலையின் இருமருங்கிலும் செடி நடுவதற்கான வேலையும் புளியங்காய் சேகரிக்கும் வேலையும் நடைபெற்றன. காலை உணவு 8.30 மணிக்கு வழங்கப்பட்டது. பின்னர் 9.30 மணியளவில் முதல் அமர்வு தூய ஆவியார் பாடலுடன் தொடங்கியது. அமர்வை வழிநடத்தவிருந்த அருட்பணி. அம்புரோஸ் அவர்களை சகோ. லாரன்ஸ் அறிமுகம் செய்து, வரவேற்றார். நம் மறைமாவட்டப் பகுதிகளின் சமூக, பொருளாதார பின்னணி, காமநாயக்கன்பட்டியின் தனிச்சிறப்பு மற்றும் மறைப்பணியைத் திறம்பட ஆற்றும் யுக்திகள் குறித்தும் தந்தை அவர்கள் உரையாற்றினார். தொடர்ந்து காலை 10.45 மணிக்கு குளிர்பானம் வழங்கப்பட்டது. பின்னர் 11.15 மணியளவில் இரண்டாம் அமர்வு தொடங்கியது. இரண்டாம் அமர்வில் வண்டானம் பங்கைக் குறித்த குழுக் கலந்தாய்வு நடைபெற்றது. சகோதரர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து கலந்தாய்வு செய்தனர். இறுதியில் குழுக்கள் தங்களுடைய பகிர்வை முடித்தபின், தந்தை அவர்கள் திருத்தங்கள் செய்து, ஆலோசனைகள் வழங்கினார்.

மதியம் 12.30 மணிக்கு உணவு வழங்கப்பட்டது. பின்னர் 1.15 மணிமுதல் பயிற்சி தொடர்ந்தது. மாலை 4.15 மணிக்கு பயிற்சி நிறைவுற்று, குளியலுக்குப்பின் 5.30 மணிக்கு தேநீர் வழங்கப்பட்டது. அதன்பின் சகோதரர்கள் குழுக்களாகப் பிரிந்து, அச்சங்குளத்திலுள்ள குடும்பங்களைச் சந்தித்தனர். பின்னர் மாலை 6.30 மணியளவில், அருட்பணி. மரிய ஜோமிக்ஸ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். கலை மாலைக் கொண்டாட்டமானது 7.30 மணிக்கு ஆரம்பமானது. 9.30 மணியளவில் நிகழ்ச்சிகள் நிறைவுற்று, இரவு உணவு வழங்கப்பட்டது. அதன்பின் 10.45 மணியளவில் அன்றைய நாளுக்கான திறனாய்வு நடைபெற்றது. நாடகத்தில் மாற்றங்கள் செய்து, ஊர் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. அதன்பின் 11.30 மணிவரை பயிற்சி நடைபெற்றது.

காலை 6.30 மணிக்கு, பங்கு ஆலயத்தில் காலை ஜெபம் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து 6.45 முதல் 7.45 வரை சாலையின் இருமருங்கிலும் செடி நடுவதற்கான வேலையும் புளியங்காய் சேகரிக்கும் வேலையும் நடைபெற்றன. காலை உணவு 8.30 மணிக்கு வழங்கப்பட்டது. பின்னர் 10 மணியளவில் நம் மறைமாவட்ட நிர்வாகி, பேரருட்திரு. மோட்சராஜன் அவர்கள் வருகை தந்தார். தந்தை அவர்கள் திருத்தொண்டர் முதல் மெய்யியல் பயில்வோர் வரை அனைவரையும் தனித்தனியாக சந்தித்தார். அதே நேரத்தில் அதிபர் தந்தை, அருட்பணி. V. K. S. அருள்ராஜ் அவர்களும் சகோதரர்களை ஆண்டுவாரியாக குழுவாக சந்தித்தார். பின்னர் 12.30 மணிக்கு, நிர்வாகி தந்தை தலைமையில் சகோதரர்களுடன் கூடுகை நடைபெற்றது. திருத்தொண்டர். அற்புதராஜ் தந்தை அவர்களையும் அருட்பணி. மரிய அந்தோணிராஜ் அவர்களையும் வரவேற்று பொன்னாடைப் போர்த்தினார். சகோதரர்கள் குருத்துவத்திற்கேற்ற எல்லா நிலையிலும் தொடர்ந்து வளர, நிர்வாகி தந்தை அறிவுறுத்தினார். பின்னர் தந்தை அவர்கள் சகோதரர்களின் கருத்துகளைக் கேட்ட போது, குருத்துவ அருட்பொழிவுத் திருப்பலியில் பாடகர் குழுவாகவும் பீடப் பணியாளர்களாகவும் சகோதரர்கள் இருக்கலாமென்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இறுதியில் திருத்தொண்டர். மரிய அருள் சேவியர் நன்றியுரை வழங்கினார். நிர்வாகி தந்தை அவர்கள் அதிபர் தந்தைக்கும் பங்குத்தந்தைக்கும் பொன்னாடைப் போர்த்தி நன்றி கூறினார்.

மதியம் 1.15 மணிக்கு உணவு வழங்கப்பட்டது. பின்னர் 2 மணிமுதல் பயிற்சி தொடர்ந்தது. மாலை 4.15 மணிக்கு பயிற்சி நிறைவுற்று, குளியலுக்குப்பின் 5.30 மணிக்கு தேநீர் வழங்கப்பட்டது. அதன்பின் சகோதரர்கள் குழுக்களாகப் பிரிந்து, தீத்தாம்பட்டியிலுள்ள குடும்பங்களைச் சந்தித்தனர். பின்னர் மாலை 7 மணியளவில், அருட்பணி. V. K. S. அருள்ராஜ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். கலை மாலைக் கொண்டாட்டமானது 7.30 மணிக்கு ஆரம்பமானது. 9.30 மணியளவில் நிகழ்ச்சிகள் நிறைவுற்று, இரவு உணவு வழங்கப்பட்டது. அதன்பின் 10.45 மணியளவில் முகாமைக் குறித்த திறனாய்வு அருட்பணி. V. K. S. அருள்ராஜ் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. முகாமை ஏப்ரல் மாதத்திலேயே ஏற்பாடு செய்யலாம் எனவும் கலை நிகழ்வுகளை ஒளிப்பதிவு செய்யலாம் எனவும் காலையில் நடைபெறும் இரண்டு அமர்வுகளுக்கு இரு வெவ்வேறு நபர்களைப் பேச அழைக்கலாம் எனவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. திறனாய்வுக்குப்பின் முகாமிற்கான ஏற்பாடுகளை செய்த அருட்பணி. தயாளன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு, பொன்னாடைப் போர்த்தப்பட்டது. அதன்பின் தந்தை அவர்கள் சுற்றுலாவுக்கான முன்னேற்பாடுகளைப் பற்றிக் கூறினார். இறுதியில் ஓராண்டு குருமாணவர்களின் தலைவராக செயல்பட்ட திருத்தொண்டர். அற்புதராஜ் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு, சகோ. ஆனந்த் புதிய தலைவராக முன்மொழியப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டார். 11.50 மணியளவில் கூடுகை நிறைவுற்றது.

08.05.2026 வெள்ளி

காலை 6 மணிக்கு, தருவைக்குளம் அருகிலுள்ள வெள்ளப்பட்டி நோக்கி சுற்றுலா தொடங்கியது. படகு சவாரி, உணவு, வாகனம் ஆகியவற்றை அருட்பணி. தயாளன் அவர்கள் மக்களுடன் இணைந்து சிறப்பாக செய்திருந்தார்கள். மாலை 4 மணியளவில் சுற்றுலா இனிதே நிறைவுற்று, அனைவரும் வண்டானம் திரும்பினர். பின்னர், கடம்பூரில் நடைபெற்ற ஆலயக் கட்டுமானப் பணிக்கான சிறப்பு ஜெபத்தில் சகோதரர்கள் கலந்துகொண்டனர். அதனோடு முகாம் இனிதே நிறைவுற்றது.

**அருட்பணி V.K.S. அருள்ராஜ்**

**செயலர்**

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பணிக்குழும்

### பணியறிக்கை - மே 2026

25-05-2026 அன்று காலை 9.30 மணிக்கு பிற்படுத்தப்பட்டோர் பணியகத்தின் மாலை நேர இணைக் கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கான கூட்டம் சாந்திநகர் தேம்பாவணி தோட்டத்தில் நடைபெற்றது. செயலர் தந்தை அவர்கள் தொடக்க ஜெபம் செய்து தொடங்கி வைத்தார்கள். மாலை நேர வகுப்பில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் தேர்ச்சி விகிதம் பற்றி தந்தை அவர்கள் இணைகல்வி ஆசிரியர்களிடம் கேட்டறிந்தார்கள். 2026-2027 கல்வியாண்டில் ஜூன் மாதத்தில் இணைக்கல்வி ஆசிரியர்களுக்கு ஒருநாள் புத்தாக்க பயிற்சி நடைபெறும் என்பதை செயலர் தந்தை அவர்கள் தெரிவித்தார்கள். மாலை நேர வகுப்பில் மாணவர்களின் கற்றல் திறன் எவ்வாறு உள்ளது என்பதை ஆசிரியர்களிடம் கேட்டறிந்தார்கள். மாணவர்களின் வருகை பதிவேடு செயலர் தந்தை அவர்களால் சரிபார்க்கப்பட்டது. இறுதியாக ஊக்கத்தொகை இணைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது.

ச. அருள் லூர்து எட்வின்

செயலர்

## தொழிலாளர் நலப்பணிக்குழு

### பணியறிக்கை - மே 2026

மே 6 முதல் ஜூன் 2 ஆம் தேதி வரை காமநாயக்கன்பட்டி பங்கு காமநாயக்கன்பட்டி மற்றும் வண்டான பங்கு அச்சங்குளத்திலும் கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் சார்பாக பெண்களுக்கான ஆரி ஒர்க் பற்றி நடைபெற்று வருகிறது. இதில் 60 பெண்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள்.

மே 03-05-2026 அன்று காமநாயக்கன்பட்டியில் சூசையப்பர் திருவிழாவை முன்னிட்டு செயலர் தந்தை அவர்கள் சிறப்பு திருப்பலி நிறைவேற்றினார்கள். பின்பு கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் சார்பாக நடைபெற்ற கூட்டத்தில் தொழிலாளர் நல பணி குழுவின் செயல்பாடுகள் மற்றும் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் பெரும் பயன்கள் பற்றி விளக்கம் அளித்தார்கள்.

8 மற்றும் 9 ஆம் தேதி கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் சார்பாக வேளாங்கண்ணியில் நடைபெற்ற தொழிலாளர் பணிக்குழுவின் நேஷனல் கூட்டத்தில் பாளையங்கோட்டை மறைமாவட்டத்தின் சார்பாக திரு. ஜோசப் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

11 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதி வரை காமநாயக்கன்பட்டி பங்கிலும் 14 முதல் 20 ஆம் தேதி வரை வண்டானம் பங்கு அச்சங்குளத்திலும் ஆதார் சிறப்பு முகாம் நடைபெற்றது.

25 மற்றும் 26 ஆம் தேதி அச்சங்குளத்தில் தொழிலாளர் நல வாரிய அட்டை பதிவு முகாம் நடைபெற்றது.

ச. அருள் லூர்து எட்வின்
செயலர்

## கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

### 2026 மே மாத பணியறிக்கை

**விடுமுறை விவிலியப் பள்ளி VBS பயிற்சி பாசறை + மையங்கள் பார்வையிடல்:**

இந்த ஆண்டு "பங்கேற்போம்...பயில்வோம்...பயணிப்போம்..." என்னும் மையக் கருத்தின் அடிப்படையில் மறைமாவட்டம் முழுவதும் ஐந்து மறைவட்ட மையங்களில் கடந்த ஏப்ரல் மாதம் வேதியர்கள் மற்றும் பயிற்சி பெற்ற தன்னார்வ மறைக்கல்வி பணியாளர்களால் VBS பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி பாசறையில் 833 தன்னார்வ VBS பயிற்சியாளர்கள் கலந்து கொண்டு, பயிற்சி பெற்று இம்மாதம் 1-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி முடிய 10 நாட்கள் மறைமாவட்டம் முழுவதும் 147 VBS மையங்களில் பயிற்சி வகுப்பை நடத்தினார்கள். இப்பயிற்சி வகுப்பில் 9695 மாணவர்கள் கலந்து கொண்டு பயணடைந்தார்கள். இவர்களுக்கு பாடல்கள், விவிலிய விளையாட்டுகள், புனித தொடர்கதை, நடனம், நான்கு நிலைகளுக்கான

தனித்தனி பாடவிளக்கம், பயிற்சிஏடு நிரப்புதல் போன்றவை கற்றுத் தரப்பட்டது. மே 1 முதல் 10ம் தேதி முடிய 10 நாட்கள் கோடை விடுமுறை விவிலியப் பள்ளி பாசறையை நடத்திய பயிற்சியாளர்களையும், பயிற்சி பெற்ற குழந்தைகளையும் உற்சாகப்படுத்தும் விதமாக வேதியர்கள், தன்னார்வ மறைக்கல்வி பணியாளர்கள் இணைந்து அனைத்து VBS மையங்களையும் பார்வையிட்டு உற்சாகப்படுத்தினார்கள்.

ஒவ்வொரு மறைவட்டத்திலும் பங்குகள் வாரியாக கீழ்கண்ட எண்ணிக்கையில் VBS மையங்கள், VBS தன்னார்வளர்கள், VBS வகுப்பில் கலந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை அமைந்திருந்தது.

**சங்கரன்கோவில் மறைவட்டம்**

| வ. எண் | பங்கின் பெயர் | VBS மையங்கள் | VBS தன்னார்வளர்கள் | VBS வகுப்பில் பங்கேற்ற மாணவர்கள் |
|---|---|---|---|---|
| 1 | ஊத்துமலை | 05 | 22 | 332 |
| 2 | சேர்ந்தமரம் | 04 | 30 | 351 |
| 3 | சிவகிரி | 03 | 13 | 160 |
| 4 | சிதம்பராபுரம் | 03 | 11 | 58 |
| 5 | புளியங்குடி | 02 | 22 | 200 |
| 6 | ரெங்கசமுத்திரம் | 02 | 07 | 92 |
| 7 | தன்னூத்து | 02 | 07 | 59 |
| 8 | துரைச்சாமியாபுரம் | 02 | 05 | 102 |
| 9 | சங்கரன்கோவில் | 01 | 10 | 64 |
| 10 | மேலஇலந்தைகுளம் | 01 | 04 | 67 |
| 11 | வேலாயுதபுரம் | 01 | 10 | 60 |
| 12 | குருவிகுளம் | 01 | 05 | 30 |
| | மொத்தம் | 27 | 146 | 1575 |

## கோவில்பட்டி மறைவட்டம்

| வ. எண் | பங்கின் பெயர் | VBS மையங்கள் | VBS தன்னார்வளர்கள் | VBS வகுப்பில் பங்கேற்ற மாணவர்கள் |
|---|---|---|---|---|
| 1 | புளியம்பட்டி | 07 | 28 | 328 |
| 2 | காமநாயக்கன்பட்டி | 04 | 34 | 584 |
| 3 | இளையரசனேந்தல் | 03 | 14 | 100 |
| 4 | வண்டானம் | 03 | 10 | 87 |
| 5 | கோவில்பட்டி | 02 | 12 | 127 |
| 6 | கயத்தார் | 02 | 07 | 96 |
| 7 | கம்மாப்பட்டி | 02 | 08 | 75 |
| 8 | நாலாட்டின்புதூர் | 02 | 06 | 44 |
| 9 | வெங்கடாசலபுரம் | 02 | 06 | 61 |
| 10 | கழுகுமலை | 01 | 16 | 134 |
| | மொத்தம் | 28 | 141 | 1636 |

## அம்பை மறைவட்டம்

| வ. எண் | பங்கின் பெயர் | VBS மையங்கள் | VBS தன்னார்வளர்கள் | VBS வகுப்பில் பங்கேற்ற மாணவர்கள் |
|---|---|---|---|---|
| 1 | கருத்தப்பிள்ளையூர் | 03 | 28 | 195 |
| 2 | அருளகம் | 04 | 21 | 250 |
| 3 | இருதயகுளம் | 02 | 12 | 170 |
| 4 | அம்பாசமுத்திரம் | 03 | 12 | 150 |
| 5 | கல்லிடைக்குறிச்சி | 01 | 05 | 30 |
| 6 | வீரவநல்லூர் | 02 | 10 | 90 |
| 7 | சேரன்மகாதேவி | 01 | 05 | 75 |
| 8 | சிங்கம்பாறை | 03 | 30 | 650 |
| 9 | தாளார்குளம் | 01 | 15 | 200 |
| 10 | நாலாங்கட்டளை | 02 | 10 | 90 |
| | மொத்தம் | 22 | 148 | 1900 |

## பாளையங்கோட்டை மறைவட்டம்

| வ. எண் | பங்கின் பெயர் | VBS மையங்கள் | VBS தன்னார்வளர்கள் | VBS வகுப்பில் பங்கேற்ற மாணவர்கள் |
|---|---|---|---|---|
| 1 | பாளை பேராலயம் | 05 | 34 | 375 |
| 2 | ஜவஹர்நகர் | 04 | 20 | 326 |
| 3 | மகாராஜநகர் | 04 | 12 | 140 |
| 4 | சேவியர்காலனி | 04 | 19 | 203 |
| 5 | சாந்திநகர் | 02 | 14 | 130 |
| 6 | இருதயநகர் | 02 | 12 | 95 |
| 7 | ஆரோக்கியநாதபுரம் | 02 | 09 | 100 |
| 8 | கே.டி.சி.நகர் | 01 | 08 | 92 |
| 9 | கல்வெட்டான்குழி | 01 | 06 | 65 |
| 10 | பேட்டை | 03 | 11 | 115 |
| 11 | நெல்லை நகரம் | 04 | 20 | 170 |
| 12 | சங்கர்நகர் | 07 | 31 | 350 |
| 13 | அலவந்தான்குளம் | 01 | 10 | 170 |
| 14 | செட்டிகுளம் | 02 | 10 | 110 |
| | மொத்தம் | 42 | 218 | 2441 |

## தென்காசி மறைவட்டம்

| வ. எண் | பங்கின் பெயர் | VBS மையங்கள் | VBS தன்னார்வளர்கள் | VBS வகுப்பில் பங்கேற்ற மாணவர்கள் |
|---|---|---|---|---|
| 1 | தென்காசி | 01 | 09 | 67 |
| 2 | கடையம் | 02 | 09 | 120 |
| 3 | செங்கோட்டை | 02 | 09 | 80 |
| 4 | வல்லம் | 02 | 12 | 160 |
| 5 | மேலமெஞ்ஞானபுரம் | 02 | 10 | 104 |
| 6 | பாவூர்சத்திரம் | 03 | 12 | 116 |
| 7 | சுரண்டை | 03 | 16 | 202 |
| 8 | வாடியூர் | 03 | 27 | 379 |
| 9 | ஆலங்குளம் | 04 | 25 | 280 |
| 10 | ஆவுடையானூர் | 03 | 17 | 240 |
| 11 | வெய்க்காலிப்பட்டி | 01 | 04 | 60 |
| 12 | அகரக்கட்டு | 01 | 24 | 265 |
| 13 | பண்டாரக்குளம் | 01 | 06 | 70 |
| 14 | நெட்டூர் | - | - | - |
| | மொத்தம் | 28 | 180 | 2143 |

அருட்பணி. ச. லூர்து மரிய சுதன்

செயலர்

## TSSS - சரணாலயம்

**மே - 2026 பணியறிக்கை**

1. குழந்தைகள் வரவேற்பு பிரிவில் புதிதாக 4 சிறுவர்கள், 17 சிறுமியர் என மொத்தம் 21 பேர் இல்லத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கல்வியைத் தொடர்வதற்காக 2 குழந்தைகள் பிற இல்லங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். தற்போது 14 சிறுமியர், 08 சிறுவர்கள் என மொத்தம் 22 பேர் இல்லத்தில் உள்ளார்கள்.

2. குழந்தைத் தத்து திட்டத்தில் இம்மாதம் 1 ஆண் குழந்தை இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது இல்லத்தில் 3 ஆண், 5 பெண் குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படுகின்றனர்.

3. திறந்த நிலைப் புகலிடத் திட்டத்தில் இம்மாதம் 15 கிராமங்களில் களப்பணி மேற்கொள்ளப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 5 குழந்தைகள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். தற்போது 09 சிறுமியர், 06 சிறுவர்கள் என மொத்தம் 15 பேர் இல்லத்தில் உள்ளார்கள்.

<u>சிறப்பு நிகழ்வுகள்</u>

✷ 11.05.2026 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழந்தை தத்து விசாரணையானது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் இயக்குநர் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

✷ 22.05.2026 அன்று மருத்துவர் திரு.செல்வராஜ் அவர்களால் இல்ல குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.

அருட்திரு. அ. ஞானதினகரன்
இயக்குநர்.

## திருநெல்வேலி சமூக சேவை சங்கம், பாளையங்கோட்டை

**மே 2026 மாதப் பணியறிக்கை**

சங்கமம் மற்றும் சிறுகடன் திட்டம்

✱ சங்கமம் தொடர்பாளர் கூட்டம் அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெற்றது. கணக்காளர்கள் கலந்துகொண்டு சேமிப்பு செலுத்தி கடன்

பெற்றுச் சென்றனர். சிறுகடன் திட்டத்தில் இம்மாதம் 10 குழுக்களைச் சார்ந்த 165 நபர்கள் பல்வேறு பொருளாதார செயல்பாடுகளுக்காக கடன் பெற்றனர் மேலும் தனிநபர் கடன் இம்மாதம் 125 பேருக்கு கொடுக்கப்பட்டது. மேலும் சங்கம் குழுக்களின் தணிக்கையானது ஒன்றியங்களில் நடைபெற்றது. மானூர் I 49 குழுக்களுக்கும், பாப்பாக்குடி 57 குழுக்களுக்கும், ஆலங்குளம் I, II 66 குழுக்களுக்கும் மற்றும் கீழப்பாவூர் 48 குழுக்களுக்கும் தணிக்கை செய்யப்பட்டது.

- 2024 - 2025ம் ஆண்டிற்கான பங்காதாயம், அம்பாசமுத்திரம், தென்காசி, பாளையங்கோட்டை, கோவில்பட்டி மற்றும் சங்கரன்கோவில் மண்டலங்களில் உள்ள 1290 குழுக்களை சேர்ந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

**நெல்லைசங்கமம்**

- நெல்லை சங்கம நிதி நிறுவனத்தில் இம்மாதம் 19 நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

**இதர செயல்பாடுகள்**

- திருநெல்வேலி சமூக சேவை சங்கத்தின் நிர்வாகக் குழு கூட்டம் 27.05.2026 அன்று பாளையங்கோட்டை மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்திரு.மோட்சராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இயக்குநர்
அருட்திரு. S.பிரான்சிஸ் சேவியர்

## நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு அறிக்கை

**மே 2026 - பணியறிக்கை**

**கத்தோலிக்க நற்செய்திக்குழு:**

மே 01, 08, 15, 22 & 29 வெள்ளிக்கிழமைகளில் குணமளிக்கும் பரிந்துரை செபம் காலை 10.30 மணி முதல் மதியம் 01.30 மணி வரை மறைமாவட்ட தூய அந்தோணியார் திருத்தல மண்டபத்தில் நடைபெற்றது. ஏறக்குறைய 100 பேர் கலந்து பயன் பெற்றனர். மதிய உணவு வழங்கப்பட்டது.

மே 17, ஞாயிறு காலை 11.00 மணி முதல் மாலை 04.30 மணி வரை உபவாச கூட்டம் மறைமாவட்ட தூய அந்தோணியார் திருத்தல மண்டபத்தில்

நடத்தப்பட்டது. இதில் சகோ.கென்னடி, தூத்துக்குடி இறைசெய்தி வழங்கினார். கத்தோலிக்க நற்செய்திக் குழுவினர் நற்கருணை ஆராதனை வழிநடத்தினர். அருட்திரு. லாரன்ஸ் S.J ஒப்புரவு அருட்சாதனம் வழங்கி திருப்பலி நிறைவேற்றினார்.

மே 23&24 (சனி & ஞாயிறு) காலை 9.30 மணி முதல் மாலை 05.15 வரை தூய இஞ்ஞாசியார் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. மேனாள் ஆயர் A. ஜூடுபால்ராஜ் D.D. திருப்பலி நிறைவேற்றினார். அருட்திரு. V.K.S. அருள்ராஜ் தொடக்கவுரை வழங்கி பெருவிழாவை தொடங்கி வைத்தார். அருட்திரு. அருள்மணி, சென்னை இருதினங்களும் இறைசெய்தி வழங்கி நற்கருணை ஆராதனையை வழிநடத்தினார். ஏறக்குறைய 300 இறைமக்கள் கலந்து கத்தோலிக்க திருஅவையின் ஆழங்களை புரிந்து, தூய ஆவியின் அபிஷேகத்திற்காக செபித்தனர்.

மே 30, சனிக்கிழமை இரவு 09.30 மணி முதல் மறுநாள் காலை 05.00 மணி வரை முழுஇரவு திருவிழிப்பு செபம் நடைபெற்றது. சகோ. ஜேம்ஸ், தூத்துக்குடி இறைசெய்தி வழங்கினார். அருட்திரு. பாஸ்கர், நற்கருணை ஆராதனை நடத்தி, திருப்பலி நிறைவேற்றினார். ஏறக்குறைய 150 பேர் கலந்து பயன்பெற்றனர்.

கிராமங்களில் வாரம் ஒருமுறை நடைபெறும் செபக் கூட்டங்கள் நடைபெற்றது. அலுவலகத்தில் தினமும் காலை 10.30 மணி முதல் மதியம் 01.30 மணி வரை நாட்டிற்காக, திருச்சபைக்காக, விண்ணப்பங்களுக்காக சிறப்பு செபம் ஏறெடுக்கப்பட்டது.

**கத்தோலிக்கப் புதுவாழ்வு இயக்கம்:**

மாதத்தின் முதல் சனி (02.05.26) சென்னை புனித தோமையார்மலை, ஆசாரிப்பள்ளம் புனித அன்னாள் இல்லம், போன்ற இடங்களில் ஆசீர்வாத உபவாசக்கூடுகை நடைபெற்றது.

மாதத்தின் 2ம் சனி (09.05.26) தென்காசி புனித மிக்கேல் அதிதூதஉ திருத்தலம், அம்பை புனித சூசையப்பர் ஆலயம், கோவில்பட்டி இலுப்பையூரணி புனித அந்தோணியார் ஆலயம், போன்ற இடங்களில் ஆசீர்வாத உபவாசக்கூடுகை நடைபெற்றது.

மாதத்தின் 3ம் சனி (16.05.26) திருநெல்வேலி இருதயநகர், சின்னவிளை (நாகர்கோவில்) போன்ற பகுதிகளில் ஆசீர்வாத உபவாசக்கூடுகை நடைபெற்றது.

மாதத்தின் முதல் வெள்ளி (01.05.26) பாவூர்சத்திரம், ஆலங்குளம், பண்டாரக்குளம் ஆலயங்களில் மாலைநேர நற்செய்திக்கூடுகை நடைபெற்றது.

புதுவாழ்வு தியான நிலையத்தில் 16.05.26 சனிக்கிழமை இரவு அமாவாசை செபம் நடைபெற்றது.

**இளம் பெண்கள் மற்றும் இளையோர் முகாம்:**

16,17 தேதிகளில் இளம்பெண்கள் முகாமும் 23,24 தேதிகளில் இளைஞர்கள் முகாமும் புதுவாழ்வு தியான நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட இளையோர்கள் கலந்து கொண்டனர்.

**குடும்பங்களுக்கான சிறப்பு தியானம்:**

28,29,30,31 (வியாழன்-ஞாயிறு) தேதிகளில் குடும்பங்களுக்கான சிறப்புத் தியானம் புதுவாழ்வு தியான நிலையத்தில் நடைபெற்றது.

தூய ஆவியில் புதுவாழ்வு மாத இதழ் 2000த்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அஞ்சல் செய்யப்பட்டது.

இரவு 8 மணி முதல் 9 மணி வரை கூகுள்மீட் வழியாக ஆன்லைன் செபம் (1100 நாட்களைக் கடந்து) நடைபெற்று வருகின்றது.

இயக்கத்தின் முழுநேரப்பணியாளர்களால் வீடு சந்திப்புப் பணிகளும் நடைபெற்றது.

புதுவாழ்வு தியான நிலையத்தில் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை பரிந்துரை செபமும், தொலைபேசியில் வரும் விண்ணப்பங்களுக்கு செபித்து ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

**அருட்பணி V.K.S. அருள்ராஜ்**
செயலர்

## பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழு

**ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே - 2026 பணியறிக்கை**

05.01.2026 அன்று திருநெல்வேலி டவுன் செயலர் தந்தை இல்லத்தில், செயலர் தந்தை மற்றும் பணியாளர்கள் இணைந்து புதிய ஆண்டு சந்திப்பு நடைபெற்றது. இந்த ஆண்டு செயல்படுத்தக்கூடிய ஒரு சில செயல்பாடுகள், மீண்டும் சிறப்பாக கொண்டு செல்வது பற்றி திட்டமிடப்பட்டது.

13.01.2026 அன்று உக்கிரன்கோட்டையில் செயல்படக்கூடிய நமது பணிக்குழுவின் தையல் பயிற்சி மையத்தில் செயலர் தந்தை, பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் மக்கள் மன்ற உறுப்பினர்கள் இணைந்து பொங்கல் விழா சிறப்பிக்கப்பட்டது. நிகழ்வில் அனைவரும் இணைந்து சிறப்பாக தமிழர் திருநாளை வரவேற்றோம். உறுப்பினர்கள் இணைந்து பொங்கல் வைத்து அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. பொங்கல் செய்தியை செயலர் தந்தை அவர்கள் சிறப்பாக மக்களுக்கு வழங்கினார்கள்.

14.01.2026 அன்று காலை சங்கரன்கோவில் மறைவட்டம் துரைச்சாமியாபுரம் இணைக்கல்வி மையத்தில் செயலர் தந்தை, இணைக்கல்வி ஆசிரியர், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து பொங்கல் விழா சிறப்பிக்கப்பட்டது. நிகழ்வில் அனைவரும் இணைந்து சிறப்பாக தமிழர் திருநாளை வரவேற்றோம். மாணவர்களின் பொங்கல் நடனம் நடைபெற்றது. பொங்கல் அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. பொங்கல் செய்தியை செயலர் தந்தை அவர்கள் சிறப்பாக மாணவர்களுக்கு வழங்கினார்கள்.

14.01.2026 அன்று மாலை கோவில்பட்டி மறைவட்டம் பாண்டவர்மங்களம் இணைக்கல்வி மையத்தில் செயலர் தந்தை, இணைக்கல்வி ஆசிரியர், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து பொங்கல் விழா சிறப்பிக்கப்பட்டது. நிகழ்வில் அனைவரும் இணைந்து சிறப்பாக தமிழர் திருநாளை வரவேற்றோம். மாணவர்களின் பொங்கல் நடனம் நடைபெற்றது. பொங்கல் அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. பொங்கல் செய்தியை செயலர் தந்தை அவர்கள் சிறப்பாக மாணவர்களுக்கு வழங்கினார்கள்.

24.01.2026 அன்று யூபிலி மேய்ப்புப்பணி மையத்தில் காலை 10.30 மணிக்கு உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுக்கான பயிற்சி நடைபெற்றது. பயிற்சியை பணிக்குழுவின் செயலர் தந்தை அவர்கள் நோக்கவுரையாற்றி தொடங்கி வைத்தார்கள். தமிழக மக்கள் நல கட்சியின் மாநில பொறுப்பாளர் டாக்டர். ராம்நாத் அவர்கள் கலந்து கொண்டு வருகின்ற தேர்தலை நாம் எவ்வாறு சந்திப்பது, எந்த அணியில் நாம் இணைந்து நிற்பது, என்பது பற்றியான கலந்து ஆலோசனை நடத்தினார்கள். இந்த பயிற்சி கூட்டத்தில் உள்ளாட்சிகள் அமைப்பானது எப்போது தொடங்கப்பட்டது, அதற்கான வருவாய் மற்றும் நடுவன் அரசு கடைபிடிக்க கூடிய இட ஒதுக்கீடு பற்றி பயிற்சி வழங்கப்பட்டது. 25 பேர் கலந்து கொண்டனர்.

04.03.2026 அன்று யூபிலி மேய்ப்புப்பணி மையத்தில் வைத்து அனைத்து பணிக்குழுக்களின் பணியாளர்கள் அனைவருக்கும் தவக்கால தியானம் ஆயரின் செயலர் அருட்பணி. மரிய அந்தோணிராஜ் அவர்கள் தலைமையில் தியானம் நடைபெற்றது. பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

பாளையங்கோட்டை மறைமாவட்டம் தென்காசி மறைவட்டம் பகுதியில்

இயங்கி வரக்கூடிய மக்கள் மன்றங்களின் கூட்டமைப்பு கூட்டம் மற்றும் பொறுப்பாளர்களுக்கான பயிற்சி மற்றும் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் விழா நிகழ்வுகள் 14.04.2026 அன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணி வரை உக்கிரன்கோட்டை தூய விண்ணரசி ஆலய வளாகம் நல்ஆயன் அரங்கில், பாளையங்கோட்டை மறைமாவட்ட பட்டியலினத்தார் பணிக்குழுவின் செயலர் அருட்பணி. A. ஜீவா அவர்கள் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது. மக்கள் மன்ற கூட்டமைப்பு பயிற்சி கூட்டத்தில், தலைமைத்துவ பயிற்சி மற்றும் சமூக பகுப்பாய்வு குறித்து மண்டல ஒருங்கிணைப்பாளர் திரு ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் பயிற்சி வழங்கினார். செயலர் தந்தை அவர்கள் அடுத்த கட்ட செயல்பாடுகள் குறித்து கலந்து ஆலோசனையும், கருத்துரைகளும் வழங்கினார். மக்கள் மன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட 55 பேர் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

25.04.2026 முதல் 02.05.2026 வரை பாளையங்கோட்டை மறைமாவட்டம் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழு மற்றும் தூய சவேரியார் கல்லூரியும் இணைந்து கத்தோலிக்க தலித் மாணவர்களுக்கான “ஆங்கில அறிவாளுமை” பயிற்சியை தூய சவேரியார் கல்லூரி வாளாகத்தில் கௌசானல் அரங்கத்தில் தூய சவேரியார் கலைமனைகளின் அதிபர் முனைவர். ச. இன்னாசிமுத்து சே.ச அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தூய சவேரியார் கல்லூரி துணை முதல்வர் முனைவர் அருட்தந்தை சூ. அருள்ரவி அவர்கள் “ஆங்கில அறிவாளுமை” பயிற்சி முகாம் நோக்கவுரையாற்றி பயிற்சியை தொடங்கி வைத்தார்கள். நமது பணிக்குழுவின் வழியாக 85 மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

பாளையங்கோட்டை மறைமாவட்டம் பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழுவின் கண்காணிப்புக்குழு கூட்டம் 21.05.2026 அன்று காலை 10.30 மணிக்கு யூபிலி மேய்ப்புப்பணி நிலையம், சாந்திநகரில் பணிக்குழுவின் அலுவலகத்தில் செயலர் தந்தை அருட்பணி A. ஜீவா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் மறைமாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர் பிரதிநிதிகள் உட்பட 11 பேர் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

பணியகத்தின் வாராந்திரக்கூட்டம் வாரந்தோறும் புதன் கிழமை நடைபெறுகிறது. இக்கூட்டங்களில் பணியாளர்கள் கடந்த வாரம் செய்யப்பட்ட பணிகளின் அறிக்கையையும் புதிய வாரத்திற்கான பணிதிட்டத்தையும் சமர்பிப்பார்கள். பணியகத்தின் வளர்ச்சி திட்டங்கள் குறித்து வாராந்திர கூட்டத்தில் கலந்துரையாடப்படும்.

**அருட்பணி. A. ஜீவா**

செயலர்

# பொதுநிலையினர் பணிக்குழு

## மே மாத அறிக்கை



பாளையங்கோட்டை மறைவட்டப் பங்குகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட இறைமக்களுக்கான கருத்தரங்கு 16.05.2026 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தூய சவேரியார் பேராலய அரங்கத்தில் நடைபெற்றது. செயலர் அனைவரையும் அன்போடு வரவேற்றார். மறைமாவட்டப் பரிபாலகர் **பேரருட்திரு M. மோட்சராஜன்** தலைமையுரை ஆற்றி கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். மறைவட்ட அதிபரும் பேராலயப் பங்குத்தந்தையுமான **அருட்திரு. M. அந்தோணி வியாகப்பன்** முன்னிலை வகித்தார். ஜூபிலி மேய்ப்புப்பணி நிலைய இயக்குநரும் பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளரும் அன்பியப் பணிக்குழுச் செயலருமான **அருட்திரு. A. பீற்றர்** வாழ்த்துரை வழங்கினார். 25 ஆண்டுகளாக அயராது அன்பியப் பணி செய்து வருகிற மறைமாவட்ட அன்பிய ஒருங்கிணைப்பாளர் **திரு. ஜான்இருதயராஜ்** சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். தமிழ்நாடு ஆயர் பேரவையின் பொதுநிலையினர் பணிக்குழுச் செயலர் **அருட்திரு. M. மரிய மிக்கேல்** **"திருஅவையின் பங்கேற்பு அமைப்புகளில் பொதுநிலையினரின் தலைமைத்துவம்"** என்ற தலைப்பில் முதல் அமர்வை காணொளிக் காட்சி மூலம் விறுவிறுப்பாக வழிநடத்தினார். திருநெல்வேலி சமூக சேவைச் சங்கத்தின் மூத்த



ஒருங்கிணைப்பாளர் **திருமிகு. M.A. துரைராஜ்** **"தலைமையேற்க வாங்க கட்டியெழுப்பத் தாங்க"** என்ற தலைப்பில் தொகுக்கப்பட்ட கருத்துப்பெட்டகத்தை அறிமுகப்படுத்தி இரண்டாவது அமர்வை வழி நடத்தினார். கலந்து கொண்ட அனைவருக்கும் கருத்துப்பெட்டகம் வழங்கப்பட்டது. பொதுக்குழு உறுப்பினர் **திருமிகு. காட்வின்** நன்றி கூறினார். **திருமதி. ஏஞ்சலா வியாகப்பன்** நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். நிறைவாக அனைவரும் பாப்பிறைப்பண் பாட கருத்தரங்கு

01.30 மணிக்கு நிறைவுற்றது. மறைவட்டத்தின் 14 பங்குகளிலிருந்து 121 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். கருத்தரங்கிற்கு இறைமக்களை அனுப்பி வைத்த பங்குத்தந்தையர்களுக்கு நன்றி பாராட்டி மகிழ்கிறேன்.

**R. அந்தோனி வியாகப்பன்**

செயலர்

## அன்பியப் பணிக்குழு

### மே மாத அறிக்கை

**அன்பியப் பொறுப்பாளர் சந்திப்பு :**

16.05.2026 சனிக்கிழமை சங்கர்நகர் பங்கு காட்டாம்புளி, கிராமத்தில் மாலை நவநாள் திருப்பலிக்குப்பின் அங்கு இயங்கி வரும் 3 அன்பிய பொறுப்பாளர்களை செயலர் தந்தை அவர்கள் சந்தித்து, கலந்துரையாடல் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து அன்பிய கூட்டங்களை சிறப்பாக நடத்திட வழிகாட்டுதல்கள் வழங்கி உற்சாகப்படுத்தினார்கள்.

**அன்பிய பணிக்குழு வெள்ளி விழா :**

தமிழக ஆயர் பேரவையின் அன்பியப் பணிக்குழு, மாநில அளவில் தொடங்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுற்று உள்ளன. எனவே 25.05.2026 திங்கள் அன்று திருச்சி பிராட்டியூர் அன்பிய பணிக்குழு பயிற்சி மையத்தில் வைத்து, அன்பிய வெள்ளி விழா தொடக்க நிகழ்வு நடைபெற்றது. திருச்சி ஆயர் மேதகு. ஆரோக்கியராஜ் அவர்கள் அன்பிய கொடியேற்றி விழாவை தொடங்கி வைத்தார்கள். தமிழக ஆயர் பேரவைத் தலைவர் மற்றும் சென்னை மயிலை உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு. ஜார்ஜ் அந்தோணிசாமி அவர்கள், திருப்பலி நிறைவேற்றினார்கள். மேலும் திருஅவையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட, இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளில் உள்ள திருஅவையின் போதனைகளை பரவலாக்கி வாழ்ந்து காட்டிய சுவாமி அமலோற்பவதாஸின் 36ம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. திருப்பலியில் அருட்பணி. வின்சென்ட் சின்னதுரை அவர்கள் சுவாமி அமலோற்பவதாஸ் அவர்களின் பணிகளை விவரித்தார்கள் மதுரை உயர் மறைமாவட்ட பேராயர் அவர்கள் வெள்ளி விழா இலட்சினையை அறிமுகம் செய்து வாழ்த்துரை வழங்கினார்கள். மேலும் சுவாமி அமலோற்பவதாஸ் அவர்களின் சிறப்பான பணிகளை குறிப்பிட்டு பேசினார்கள். திருப்பலியினைத் தொடர்ந்து வாழ்த்துக் கூட்டமும் நடைபெற்றது.

மதிய உணவிற்குப்பின் பொதுக்குழு கூட்டம் மேதகு ஆயர் அமல்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் வெள்ளி விழா ஆண்டில் மேற்கொள்ள வேண்டிய மேய்ப்புப்பணி சார்ந்த திட்டங்கள் குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடலில் இடம் பெற்ற கருத்துக்கள் தொகுக்கப்பட்டு விரைவில் மறை மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் எனவும், பங்கு, மறைவட்ட மற்றும் மறைமாவட்ட அளவில் அன்பிய பணிக்குழுவின் வெள்ளி விழாவினை சிறப்பாகக் கொண்டாடிடவும் அழைப்பு விடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் நமது மறைமாவட்டத்திலிருந்து செயலர் தந்தை உட்பட ஏழு பேர் கலந்து கொண்டனர்.

அருட்பணி அ. பீற்றர்
செயலர்

## குடும்ப நலவாழ்வுப் பணிக்குழு

**மே மாதப்பணியறிக்கை - 2026**

### 1) திருமண முன் தயாரிப்புப் பயிற்சி பங்கேற்றவர்கள்

| | |
|---|---|
| ஆண்கள் | - 53 பேர் |
| பெண்கள் | - 54 பேர் |
| மொத்தம் பங்கேற்றவர்கள் | - 107 பேர் |

### 2) திருமணத் தகவல் நிலையம்

| | |
|---|---|
| பதிவு செய்தவர்கள் | - 35 பேர் |
| பார்வையிட்டவர்கள் | - 84 பேர் |
| திருமணம் நிறைவேறியவர்கள் | - 11 பேர் |

### 3) திருமண முன் தயாரிப்புப் பயிற்சி விபரம்

| | |
|---|---|
| ஜூன் 2026 | 05,06.06.2026 முதல் வெள்ளி, சனி<br>19,20.06.2026 மூன்றாம் வெள்ளி, சனி<br>காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை |
| ஜூலை 2026 | 03,04.07.2026 முதல் வெள்ளி, சனி<br>17,18.07.2026 மூன்றாம் வெள்ளி, சனி<br>காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை |

அன்புடன்,
அருட்பணி ஜெமல்ஸ் ஜேம்ஸ்,
செயலர்

## பாளையங்கோட்டை மறைமாவட்டப் பள்ளிகளில்
## 2025-2026ஆம் கல்வியாண்டில் 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் தேர்ச்சியுற்றோர்

| வ. எண் | பள்ளியின் பெயர் | +2 தேர்வுக்கு அனுப்பப் பட்டோர் | தேர்ச்சி யுற்றோர் | தவறி யோர் | முதல் மற்றும் இரண்டாம் இடங்கள் | சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி **அலவந்தான்குளம்** | 11 | 11 | -- | I - 446<br>II - 407 | **100%** |
| 2. | திரு இருதய மேல்நிலைப் பள்ளி **மேலஇலந்தைக்குளம்** | 99 | 99 | - | I - 546<br>II - 537 | **100%** |
| 3. | அன்னை தெரசா ஆர்.சி. மேல்நிலைப் பள்ளி **வல்லம்** | 58 | 58 | --- | I - 559<br>II - 525 | **100%** |
| 4. | புனித அருளானந்தர் மேல்நிலைப் பள்ளி அகரக்கட்டு | 50 | 50 | --- | I - 553<br>II - 551 | **100%** |
| 5. | புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி **கருத்தப்பிள்ளையூர்** | 52 | 52 | --- | I - 531<br>II - 516 | **100%** |
| 6. | புனித யோவான் மேல்நிலைப் பள்ளி **வாடியூர்** | 28 | 28 | --- | I - 496<br>II - 480 | **100%** |
| 7. | புனித அலாய்சியஸ் மேல்நிலைப்பள்ளி, காமநாயக்கன்பட்டி | 45 | 45 | - | I - 549<br>II - 544 | **100%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8. | புனித அருளப்பர் மேல்நிலைப்பள்ளி **ஆவுடையானூர்** **(1st Mark) (2nd Mark)** | 346 | 344 | 2 | **I - 572** **II - 568** | **99.4%** |
| 9. | புனித பவுல் மேல்நிலைப் பள்ளி **சிங்கம்பாறை** | 73 | 72 | 1 | I - 543 II - 508 | **99%** |
| 10. | வீரமாமுனிவர் ஆர்.சி. மேல்நிலைப் பள்ளி **தென்காசி** | 179 | 178 | 1 | I - 559 II - 528 | **99%** |
| 11. | புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி **கோவில்பட்டி** | 122 | 121 | 1 | I - 558 II - 481 | **99%** |
| 12. | ஆர்.சி.மேல்நிலைப்பள்ளி **புளியங்குடி** | 47 | 46 | 1 | I - 540 II - 498 | **98%** |

100% தேர்ச்சி தந்த தாளாளர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மற்றும் மாணாக்கர்கள் அனைவருக்கும் சிறப்பான பாராட்டுக்கள். அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணக்கர்களுக்கும் சிறப்பான பாராட்டுக்கள். தங்கள் அனைவரது விடாமுயற்சியும் மற்றும் கடின உழைப்பும் தொடர வாழ்த்துக்கள்!

கண்காணிப்பாளர்
பாளை மறைமாவட்டப் பள்ளிகள்
தேம்பாவணித்தோட்டம்
திருநெல்வேலி - 627 011

## பாளையங்கோட்டை கத்தோலிக்க மறைமாவட்டப் பள்ளிகளில்
## 2025-2026 கல்வியாண்டில் 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் தேர்ச்சியுற்றோர் விபரம்

| வ. எண் | பள்ளியின் பெயர் | 10ஆம் வகுப்பு தேர்வுக்கு அனுப்பப் பட்டோர் | தேர்ச்சி யுற்றோர் | தவறி யோர் | முதல் மற்றும் இரண்டாம் இடங்கள் | சதவிகி தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | புனித ஜோசப் உயர்நிலைப் பள்ளி **வெய்க்காலிப்பட்டி** **(2nd Mark)** | 101 | 101 | - | **I - 491**<br>II - 478 | 100% |
| 2. | செயின்ட் மேரீஸ் உயர்நிலைப் பள்ளி **லிங்கம்பட்டி** | 27 | 27 | - | I - 488<br>II - 485 | 100% |
| 3. | அன்னை தெரசா ஆர்.சி மேல்நிலைப் பள்ளி **வல்லம்** | 121 | 121 | - | I - 480<br>II - 479 | 100% |
| 4. | புனித அருளானந்தர் மேல்நிலைப் பள்ளி **அகரக்கட்டு** | 70 | 70 | - | I - 473<br>II - 464 | 100% |
| 5. | புனித யோவான் மேல்நிலைப் பள்ளி **வாடியூர்** | 38 | 38 | - | I - 468<br>II - 464 | 100% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | வீரமாமுனிவர் ஆர்.சி. மேல்நிலைப் பள்ளி தென்காசி | 212 | 210 | 2 | I - 489<br>II - 487 | 99% |
| 7. | புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி கோவில்பட்டி | 70 | 69 | 1 | I - 452<br>II - 442 | 99% |
| 8. | புனித அலாய்சியஸ் மேல்நிலைப் பள்ளி காமநாயக்கன்பட்டி | 65 | 64 | 1 | I - 482<br>II – 469 | 99% |
| 9. | புனித அருளப்பர் மேல்நிலைப் பள்ளி ஆவுடையானூர் **($1^{st}$ Mark)** | 366 | 358 | 8 | **I - 492**<br>II - 490 | 98% |
| 10. | புனித பவுல் மேல்நிலைப் பள்ளி சிங்கம்பாறை | 90 | 88 | 2 | I - 479<br>II – 466 | 98% |
| 11. | ஆர்.சி. பாத்திமா உயர்நிலைப் பள்ளி கயத்தார் **($2^{nd}$ Mark)** | 100 | 96 | 4 | **I - 491**<br>II - 487 | 96% |
| 12. | புனித அந்தோணியார் உயர்நிலைப் பள்ளி பேட்டை | 66 | 63 | 3 | I - 473<br>II – 455 | 96% |
| 13. | புனித பீட்டர் உயர்நிலைப் பள்ளி சேர்ந்தமரம் | 54 | 52 | 2 | I - 448<br>II - 437 | 96% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14. | ஆர்.சி. உயர்நிலைப் பள்ளி, தேவிபட்டணம் | 48 | 46 | 2 | I - 443<br>II – 430 | 96% |
| 15. | புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி கருத்தப்பிள்ளையூர் | 61 | 58 | 3 | I - 475<br>II – 465 | 95% |
| 16. | ஆர்.சி. மேல்நிலைப் பள்ளி, புளியங்குடி | 80 | 75 | 5 | I - 459<br>II - 452 | 94% |
| 17. | திருஇருதய மேல்நிலைப் பள்ளி மேலஇலந்தைக்குளம் | 91 | 78 | 13 | I - 477<br>II - 447 | 86% |
| 18. | அமல அன்னை உயர்நிலைப் பள்ளி ரெங்கசமுத்திரம் | 31 | 26 | 5 | I - 468<br>II - 433 | 84% |
| 19. | புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி அலவந்தான்குளம் | 19 | 15 | 4 | I - 469<br>II – 466 | 79% |

100% தேர்ச்சி தந்த தாளாளர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மற்றும் மாணாக்கர்கள் அனைவருக்கும் சிறப்பான பாராட்டுக்கள். அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணக்கர்களுக்கும் சிறப்பான பாராட்டுக்கள். தங்கள் அனைவரது விடாமுயற்சியும் மற்றும் கடின உழைப்பும் தொடர வாழ்த்துக்கள்!

கண்காணிப்பாளர்
பாளை மறைமாவட்டப் பள்ளிகள்
தேம்பாவணித்தோட்டம்
திருநெல்வேலி - 627 011

# ஆயரின் நல நிதிகள்

**மே - 2026**

| குருமாணவர் நல நிதி | |
|---|---|
| திரு. ஜாண் பிரிட்டோ | 6,000.00 |
| சங்கரன்கோவில் இறைமக்கள் | 6,000.00 |
| Brothers of the Sacred Heart of Jesus | 5,000.00 |
| திருமதி. மரிய செல்வமேரி | 2,000.00 |
| ஆலவந்தான்குளம் இறைமக்கள் | 1,500.00 |
| திருமதி. எலிசபெத் பிலிப், பாளையங்கோட்டை | 1,000.00 |
| திருமதி. ரோசலி, சேரன்மகாதேவி | 500.00 |
| மொத்த இருப்புத்தொகை | 32,000.00 |
| இம்மாதம் வழங்கியது | **32,000.00** |
| **ஏழை மாணவர் கல்வி நிதி** | |
| பேராயர். அந்தோணிசாமி கல்விநிதி | 1,58,625.00 |
| முன் கையிருப்பு | 34,812.00 |
| மொத்த கையிருப்பு | 1,93,437.00 |
| இம்மாதம் வழங்கியது | 51,000.00 |
| மொத்த இருப்புத்தொகை | 1,42,437.00 |
| **குடும்ப நல நிதி** | |
| முன் கையிருப்பு | 4,88,647.00 |
| இம்மாதம் வழங்கியது | 25,090.00 |
| மொத்த இருப்புத்தொகை | **4,63,557.00** |
| **மருத்துவ நல நிதி** | |
| முன் கையிருப்பு | 7,896.00 |
| இம்மாதம் வழங்கியது | 5,000.00 |
| மொத்த இருப்புத்தொகை | **2,896.00** |
| **நற்செய்திப் பணி நிதி** | |
| முன் கையிருப்பு | 3,79,370.00 |
| திருமதி. ரோசரி, சேரன்மகாதேவி | 500.00 |
| மொத்த இருப்புத்தொகை | **3,79,870.00** |


## BISHOP EMERITUS JUDE PAULRAJ'S ENGAGEMENTS

**June - 2026**

| Date | Time | Programme |
|---|---|---|
| 01.06.2026 | A.M. | Wedding 70th Anniversary Mass, Kattur |
| 05.06.2026 | P.M. | Flag Hoisting and Mass, Kaliakkavilai |
| 07.06.2026 | A.M. | Flag Hoisting and Mass, Hosur |
| 08,10.06.2026 | | St. John's Hospital, Bangalore |
| 11.06.2026 | P.M. | Flag Hoisting and Mass, Boltanpuram |
| 12.06.2026 | P.M. | 1st Holy Communion Mass, Aayankulam |
| 13.06.2026 | P.M | Feast Mass, Irudayanagar |
| 14.06.2026 | A.M. | Feast Mass, Kadayalmoodu |
| | P.M. | Church Blessing, Punganur |
| 17.06.2026 | A.M. | Wedding Mass, KTC Nagar |
| 18.06.2026 | A.M. | Wedding Mass, Kadiapatanam |
| 19.06.2026 | P.M. | Flag Hoisting and Mass, Anjal Nagar |
| 20.06.2026 | A.M. | Holy Communion Mass, Anjal Nagar |
| | P.M. | Feast Mass, Xavier's Colony |
| 21.06.2026 | A.M. | Feast Mass, Karankadu |
| | P.M. | Mass in honor of Servant of God Peter Paradesi, St. Antony's Shrine, Palayamkottai |
| 24.06.2026 | A.M. | Wedding Mass, Pollachi |
| 27.06.2026 | A.M. | Baptismal Mass, Arulagam |
| 29.06.2026 | P.M. | Altar Consecration Mass, Mylapuram |

**+ Jude**







**For Private Circulation only**
Edited & Published by
REV. FR. XAVIER DEVASAGAYAM
CHANCELLOR, CATHOLIC BISHOP'S HOUSE, P.B.No. 108, PALAYAMKOTTAI-2
e-mail : chancellor@palayamkottaidiocese.org
Web : www.palayamkottaidiocese.org